M. I. Mohamed Irfan[1]

# Practical Challenges of the Eighteenth Amendment of the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka

# இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 18வது திருத்தச் சட்டமும் அதனது நடைமுறைச் சவால்களும்

(1) Faculty of Islamic Studies & Arabic Language, South Esatern University of sri Lanka, Oluvil, Sri Lanka.
(email: irfanibrahim86@gmail.com)

**ஆய்வுச் சுருக்கம் (Abstract):** இலங்கை ஜனநாயக சோஷலிஸ குடியரசு யாப்பில் இதுவரை கொண்டுவரப்பட்ட யாப்புத்திருத்தச் சட்டத்தில் 18வது திருத்தச் சட்டமானது பிரதானதாகும். ஜனாதிபதியின் ஆட்சிக்காலம், பாராளுமன்ற சபையை உருவாக்குதல், பொலிஸ் மற்றும் தேர்தல் ஆணைக்குழுக்களை மீள்பரிசீலினை செய்தல் போன்ற பல மாற்றங்களை உள்ளடக்கியதாக இத்திருத்தம் அமைந்துள்ளது. *(Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka (1978), Eighteenth Amendment to the Constitution)* 18வது யாப்புச்சீர்திருத்த உருவாக்கத்தின் பொருத்தப்பாடு, அதனது நடைமுறை ரீதியான ஜனநாயகத் தன்மை மற்றும் அதன் மீதுள்ள அழுத்தங்களையும் அடையாளம் காண்பது இவ்வாய்வின் நோக்கமாகும். இங்கு பண்புசார் மற்றும் அளவுசார் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அத்தரவுகள் முதன்நிலைத் தரவுகளான வினாக்கொத்து, நேர்காணல் ஆகிய ஆய்வு நுட்பங்களையும் இரண்டாம் நிலைத்தரவான பொருத்தமான நூல்கள், ஆவணங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணைத்தளம் என்பவற்றிலிருந்தும் சேகரிக்கப்பட்டுள்ளது. இத்திருத்தமானது, ஜனாதிபதியின் அதிகாரத்தை மேலும் வலுப்படுத்துவதாகவும் பாராளுமன்ற, பங்குபற்றுதல் ஜனநாயகம், வலுவேறாக்கம், நீதிப்புரணாய்வு அதிகாரம் போன்றவற்றை கேள்விக்குட்படுத்தியுள்ளதோடு சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கு எதிர்மறையாகவும் அமைந்துள்ளது.

**கலைச் சொற்கள் (Keywords):** 18வது திருத்தம், ஜனநாயகம், அதிகாரம், பாராளுமன்றம்.

## அறிமுகம் (Introduction)

1978ஆம் ஆண்டைய இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு யாப்பில் இன்றுவரை காலத்தின் தேவைக்கேற்ப 18 யாப்புச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திருத்தங்களில் 18வது திருத்தச் சட்டமானது இன்று சர்வதேச ரீதியில் பிரசித்தி வாய்ந்ததாகப் பேசப்பட்டு வருகின்றது. இவ்வரசியலமைப்புத் திருத்தச் சட்டமானது 2010.09.08 பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு 161 வாக்குகள் ஆதரவாகவும் 17 வாக்குகள் எதிராகவும் அழிக்கப்பட்ட நிலையில் இச்சட்டம் உருவாக்கப்பட்டது *(சபரி: 2010.09.12, 04)*. இத்திருத்தமானது சிவில் அமைப்புக்களினதும் எதிர்க்கட்சிகளினதும் பாரிய எதிர்ப்புக்கு மத்தியில் நிறைவேறியது. இதற்கு திமிழ்த் தேசிய கூட்டமைப்பும் தேசிய ஜனனாயக முன்னணியும் எதிராக வாக்களித்தன. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி சமூகமளிக்காமல் வாக்களிப்பை பகிஸ்கரித்தது.

இலங்கை அரசியல் வரலாற்றில் 2∴3 பெரும்பாண்மை வாக்கினைப் பெற முடியாத சூழ் நிலையில் எதிர்கட்சி உறுப்பினர்களின் கட்சித்தாவல் மூலம் 2∴3 பெரும்பாண்மை பெற்று இத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. ஆரம்பத்தில் ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரபா கணேசனும்

தொழிலாளர் தேசிய சங்கத்தைச் சேர்ந்த திகாம்பரமும் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து எதிரணி உறுப்பினர்கள் அரசுக்கு வாக்களித்தனர் . அவ்வகையில், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களான பதுளை மாவட்ட எல். பி. லுக்மன் செனவிரத்ன, பொலனறுவை மாவட்ட எம் .பி. குணசேகர, காலி மாவட்ட எம் பி மனுச நாணயகார, கண்டி மாவட்ட ஏ.ஆர். எம். அப்துல் காதர், புத்தளம் மாவட்ட எம். பி. புத்திக பத்திரன ஆகியோர் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கினர். இக்கட்சித் தாவல் இடம்பெறும் வேளையில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க இந்தியா சென்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். மேலும் உபேக்சிகா சொர்ணமாலிகா, நில்வள விஜேசிங்க, மனுச நாணயகார போன்ற முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் அரசாங்கத்திற்கு ஆதரவு தெரிவித்தனர்.

மேலும் இத்திருத்தச் செய்றபாட்டிற்கு ஆரம்பத்தில் எதிர்ப்புக் கோஷங்களைத் தெரிவித்து வந்த இடதுசாரிகள் இறுதி நேரத்தில் ஆதரவு தெரிவித்தது. ஏதிர்க்கட்சியில் இருந்த சிறி ரங்கா, தமிழ்க் கூட்டமைப்பு அம்பாரை மாவட்ட எம். பி. பியசேன போன்றோரும் ஆதரவு தெரிவித்தனர். இவ்வகையில் முற்றுமுழுதாக பொதுமக்களின் விருப்பத்திற்கு மாற்றமான முறையிலே இத்திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது எனலாம்.

18வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் உருவாக்கமானது அதன் பிரதான புதிய அம்சங்களைக் கொண்டுள்ளது அவ்வகையில்,

- ஒருவர் எத்தனை தடவையும் ஜனாதிபதியாகப் பதவிவகிக்கலாம்.
- மூன்று மாதத்திற்கொரு முறை ஜனாதிபதி பாராளுமன்றத்திற்குப் பொறுப்புக் கூறவேண்டும்.
- அரசியலமைப்புச் சபைக்குப் பதிலாக பாராளுமன்ற சபையொன்றை உருவாக்குதல்.
- அமைச்சரவை மற்றும் அரச சேவைகள் ஆணைக்குழு என்பனவற்றின் அதிகாரங்கள், செயற்பாடுகள், பொறுப்புக்கள் மீளமைக்கப்பட்டு அதிலுள்ள நடைமுறைச் சிக்கல்களைக் களைதல்.
- பொலிஸ் ஆணைக்குழுவுக்குப் பதிலாக பொலிஸ்மா அதிபர் உற்பட பொலிஸார் சேவை என்ற கட்டமைப்புக்கள் கொண்டுவருதல்.
- தேர்தல் ஆணைக் குழுவின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகள் மீளமைக்கப்படல் *(சபரி: 2010.09.12, 04).*

18வது திருத்தத்தைப் பொருத்தமட்டில் பல்வேறு புதிய விடயங்கள் உள்ளடக்கப் பட்டுள்ளதோடு ஏற்கனவே கொண்டுவரப்பட்ட இலங்கை அரசியல் யாப்பிலும் திருத்தங்களிலும் பல மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அதாவது குறிப்பாக 13ஆம், 17ஆம் திருத்தங்கள் பொய்ப்பிக்கப்படுமளவிற்கு இத்திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இத்திருத்தத்தின் மூலம் அரசிலமைப்பின் 31, 32ஆம் சரத்துக்கள் (ஜனாதிபதியின் பதவிக்காலம்), 41.1 – 41.7 வரையான சரத்துக்கள் நீக்கப்பட்டு (17ம் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் உட்சேர்க்கப்பட்டது) புதியதொரு 41.1 சரத்து சேர்க்கப்பட்டுள்ளது. (பாராளுமன்றப் பேரவை), 54ஆம் சரத்து (பகிரங்க சேவை ஆணைக்குழு) 55.1 உறுப்புரை நீக்கப்பட்டு புதிய சரத்து உட்சேர்க்கப்பட்டுள்ளது. (நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்கக்கட்டுப்பாடு மற்றும் பதவிநீக்கம் தொடர்பான கொள்கை உள்ளடங்கலாக பொதுத்துறை அதிகாரிகளுடன் தொடர்புபட்ட கொள்கை விடயங்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் கபினட்டிடன் வழங்கப்பட்டுள்ளது.) அவ்வாறே 55.2 (சகல திணைக்களத் தலைவர்களினதும் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்கக்கட்டுப்பாடு மற்றும் பதவி நீக்கம் என்பன அமைச்சரவைக்கு உரித்தாக்கப்பட்டுள்ளது.) 55.3ஆம் சரத்து (ஊழியர்கள் தொடர்பான இக்கருமங்கள் அனைத்தும் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் பகிரங்க சேவை ஆணைக்குழுவையே சாரும்) *(Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka (1978)).*

மேற்கூறிய முக்கிய மாற்றங்களை அறிமுகம் செய்துள்ளதாகவே அரசிலமைப்புக்கான 18ஆம் திருத்தம் காணப்படுகின்றது. இத்திருத்தச் சட்டத்தின் உள்ளடக்கத்தினை நோக்குகின்ற போது அவை ஜனாதிபதியின் கரத்தினை மேலும் பலப்படுத்துவதனை அவதானிக்கலாம். மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை ஜனாதிபதி

பாராளுமன்றத்துக்கு சமூகமளிக்க வேண்டியுள்ளதால் அவரது பாராளுமன்றத்துக்குப் பொறுப்புக் கூறும் தன்மை அதிகரிக்கும் என வாதிடப்பட்டாலும் அவை நடைமுறைப் பெறுமானம் அற்றவை என்றே கூறவேண்டும். சுருங்கக் கூறுவதாயின் அரச இயந்திரத்தின் அதிகாரங்கள் பலப்படுத்தப்பட்டு ஜனாதிபதியின் பதவிக் காலத்தினை நீடிப்பதற்கான தடையை அகற்றுவதற்கான ஒரு திருத்தமாக இத்திருத்தத்தினைக் கண்டுகொள்வதோடு நாட்டின் ஜனநாயகத்தை கேள்விக்குட்படுத்தும் ஒரு திருத்தமாகவும் அமைந்துள்ளது. இதனடிப்படையில் இலங்கையில் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தின் 18வது திருத்த உருவாக்கத்தின் அவசியத்தினையும் இத்திருத்தத்தில் காணப்படும் சவால்களையும் அதனது நடைமுறைப் போக்கினையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

மேலும் 18வது யாப்புச் சீர்திருத்த உருவாக்கத்தின் பொருத்தப்பாடு, அதனது நடைமுறை ரீதியான ஜனநாயகத் தன்மை மற்றும் அதன் மீதுள்ள அழுத்தங்களையும் அடையாளம் காண்பது இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு முறையியல் (Methodology)

இவ்வாய்வு விபரணரீதியான பகுப்பாய்வு மாதிரியினை அடிப்படையாகக் கொண்டதாகும். இங்கு பண்புசார் மற்றும் அளவுசார் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அத்தரவுகள் முதன்நிலை மற்றும் இரண்டாம் நிலைத்தரவு மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்டுள்ளது. முதன்நிலைத் தரவுகள் வினாக்கொத்து, நேர்காணல் ஆகிய ஆய்வு நுட்பங்களைக் கொண்டும் இரண்டாம் நிலைத்தரவுகள் பொருத்தமான நூல்கள், ஆவணங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளம் என்பவற்றிலிருந்தும் சேகரிக்கப்பட்டுள்ளது. வினாக்கொத்தினூடாக இலங்கையில் யாப்புச் சீர்திருத்தம், 18வது திருத்தத்தின் உருவாக்கம், அதனது உண்மைத்தன்மை, இத்திருத்தத்தின் தேவை உணரப்பட்ட விதம், 18வது திருத்தத்தின் தேசிய, சர்வதேச ரீதியான பார்வை, இத்திருத்தத்தினால் ஏற்படும் சவால்கள், பாதிப்புக்கள் போன்ற பல்வேறு விதமான தகவல்கள் பெறப்பட்டன. இவ்வினாக்கொத்தானது பொதுமக்கள், துறைசார் நிபுணர்கள், அரசியல் ஆர்வலர்கள், போன்றவர்களிடம் 250 வினாக்கொத்து கொடுக்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளது.

## முடிவும் கலந்துரையாடலும் (Results and Discussions)

18வது திருத்தச் சட்டத்தின் உண்மைத் தன்மையினையினையும் ஜனநாயகப் போக்கினை ஆராய்வதினை நோக்காகக் கொண்ட இவ்வாய்வானது வினாக்கொத்து, நேர்காணல் மற்றும் இது தொடர்பான நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகளினூடாக பெறப்பட்ட தகவல்களை மையமாகக் கொண்டு பல்வேறு முடிவுகளையும் அதனது நடைமுறைத் தன்மையினையும் ஆராய முடிந்தது. அவ்வகையில்,

### 18வது திருத்தச் சட்டத்தினூடாக 13ஆம்,17ஆம் திருத்தம் பொய்ப்பிக்கப்பட்டுள்ளன (Obsolesce of the 13th & 17th Amendment through the 18th Amendment)

அதாவது, அரசியல் யாப்பு மாற்றம் என்பது நாட்டின் ஜனநாயக பண்புகளை மேம்படுத்துவதாக அமைய வேண்டும். ஆனால் இலங்கையின் வரலாற்று அனுபவத்தில் ஜனநாயகப் பண்புகளை பொய்ப்பிப்பதாக அமைந்துள்ளது. இதனடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ள 18வது திருத்தச் சட்டமானது பல்வேறு விதமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதாவது இச்சட்டத்தின் மூலம் 13ஆம் திருத்தச் சட்டம், 17ஆம் திருத்தச் சட்டம் போன்றன செயலிழந்துள்ளதோடு அராஜகத் தன்மை வாய்ந்த ஆட்சி இடம்பெறுவதற்கும் ஜனாதிபதியின் அதிகாரம் மேலும் வலுப்பெறுவதாக அமைந்துள்ளது. இதனடிப்படையில் பிரதானமாக 18வது திருத்தச் சட்டமானது 13வது திருத்தச் சட்டத்தினை கேள்விக்குறியாக்கியுள்ளமையானது மாகாண சபைகளினுடைய செயற்பாட்டிற்கு சவாலாக அமைகின்றது.

18வது திருத்தச்சட்டம் உருவாக்கப்படுவதற்கு முன்னர் 13வது திருத்தத்தில் உள்ள பல அதிகாரங்களை மத்திய அரசும் ஜனாதிபதியும் தன்வசம் வைத்துள்ளனர். மேலும் எஞ்சிய அதிகாரங்களையும் தங்கள் வசம் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தை இத்திருத்தம் ஏற்படுத்தியுள்ளது. அதாவது 13ஆம் திருத்தச் சட்டத்தினை நிறைவேற்றி அதற்கப்பால் இன்னும் பல விடயங்களைக் கொடுப்பேன் (13+) என இதுநாள் வரையும் இலங்கை அரசு அறிவித்திருந்தது. ஆனால் இன்று 18வது திருத்தச் சட்டத்தின் மூலம் 13வது

திருத்தச் சட்டத்திற்கான விடயங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. அதாவது 13வது திருத்தத்தில் உள்ள பொலிஸ் ஆணைக்குழு என்ற விடயம் அழிக்கப்பட்டு இது தொடர்பான சகல அதிகாரங்களும் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் பொலிஸ்மா அதிபரிடம் ஒப்படைக்கப்படுகின்றது. இதனால் இத்திருச்சட்டத்திலுள்ள பொலிஸ் ஆணைக்குழு என்ற விடயம் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 18வது திருத்தச் சட்டமானது எவ்வகையில் சவாலை தேற்றுவிக்கின்றது என்று பல்வேறு விதமான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அவ்வகையில் நோக்கும் போது,

முன்னால் கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் சிவனேசனதுறை சந்திரகாந்திரன் கருத்து தெரிவிக்கும் போது "மாகாண சபைக்கு வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரம் 18வது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் செயல் இழக்கப்பட்டுள்ளது. மாகாணத்திற்குற்பட்ட பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் தொடர்பில் வழங்க முடியாமல் உள்ளபோதும் பதினேழாம் திருத்த அரசியலமைப்புப் குழுவில் 10பேராக இருந்தவர்கள் 18வது திருத்தத்தால் ஐந்து பேராக குறைக்கப்பட்டுள்ளது. மேலும் மாகாணசபை முறை பலமிழக்கும் நிலைக்கு வந்துள்ளது" என்றார்(தினக்குரல், 2010.09.14:12).

மேலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் இத்திருத்தத்தினை எதிர்த்தனர். இது மட்டுமல்லாது மாகாணசபை முறையின் செயற்பாட்டில் பாரிய சவால்களை தோற்றுவிக்கின்றது. என பரிந்துரைத்தது. அந்த வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கருத்து தெரிவித்த போது "ஜனாதிபதியானவர் இரண்டு தடவைக்கு மேல் பதவி வகிப்பது சர்வாதிகாரத்தை தோற்றுவிக்கும், அவ்வாறே பதின்மூன்றாவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட நற்பலங்களையும் இல்லாமற் செய்துள்ளது" எனத் தெரிவித்துள்ளது (தினக்குரல், 2010.09.12:04).

அது மட்டுமல்லாது அரசியலமைப்பு விவகார நிபுணர்களும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினரின் அறிக்கையும் கருத்து தெரிவிக்கும் போது 13வது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றி அதற்கப்பால் இன்னும் பல விடயங்களைக் கொடுப்பேன் என இதுநாள் வரையும் இலங்கையரசு தெரிவித்தது. ஆனால் அது இன்று 18வது திருத்தத்தால் 13வது திருத்தத்தில் உள்ள விடயங்கள் பறிக்கப்பட்டுள்ளது என்றனர்(தினக்குரல் 2010.09.12:04).

மேலும் ஜனாதிபதி சட்டத்தரணியும் அரசியலமைப்பு கற்கைகளுக்கான நிலையத்தின் இயக்குநருமான கலாநிதி ஜெயந்த விக்கிரமரட்ன தெரிவிக்கும் போது "18வது திருத்தச் சட்டமானது நாட்டுக்கு எந்த வகையிலும் பயனற்றது" என்றார் (தினக்குரல் 2010.09.12:15).

மேலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவிக்கும் போது "13வது அரசியலமைப்புத் திருத்தத்திலுள்ள மாகாண பொலிஸ் ஆணைக்குழு, மாகாண நிர்வாக ஆணைக்குழு இல்லாமல் செய்யப்பட்டுள்ளது 18வது திருத்தம் தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வினை வெகுதூரம் தள்ளிவிடும்" என்றார். (தினக்குரல், 2010.09.08:07).

இந்தவகையில் 13வது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் விதந்துரைக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் 18வது திருத்தச் சட்டத்தின் மாவட்ட பொதுசன சேவைகள் ஆணைக்குழு மற்றும் மாவட்ட பொலிஸ் ஆணைக்குவின் நிராகரிப்பால் பறித்தெடுக்கப்பட்டுள்ளது, அவ்வாறே ஐ.தே.க. உறுப்பினர் யோகராஜா கூறும்போது, "சர்வதிகாரத்தை பலப்படுத்திக் கொள்வதற்காக 18வது திருத்தம் முன்வைக்கப்படுகின்றது. மேலும் தமிழ் மக்கள் நீண்ட கால எதிர்பார்ப்பாகிய அதிகாரப்பகிர்வு, தேசிய அரசியல் தீர்வு முற்றாகக் ஒழிக்கப்பட்டுள்ளது" என்றார். (தினக்குரல் ,2010.09.08:20).

அவ்வகையில் 18வது திருத்தச் சட்டத்தினூடாக 13வது திருத்தச் சட்டத்தில் மாகாணசபைகளுக்கென வழங்கப்பட்ட ஓரளவு அதிகாரத்தைக் கூட இல்லாமல் செய்துள்ளது. அதாவது மாகாண பொலிஸ் ஆணைக்குழுவினை இல்லாமல் செய்ததோடு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் பொலிஸ்மா அதிபரிடம் அதிகாரங்கள் ஒப்படைக்கப்படுகின்றது. மேலும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுக்களின் அதிகாரங்களையும் இத்திருத்தமானது தட்டிப்பறிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனூடாக மாகாண சபையானது பலமிழந்த ஒன்றாக மாறுகின்றது. இச்செயற்பாடானது மாகாண சபையின் செயற்பாட்டிற்கும் பாரிய சவாலினை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

17வது திருத்தத்தில் உள்ள சுதந்திர ஆணைக் குழுவிலுள்ள உறுப்பினர்களை நியமிக்கும் போது அரசியலமைப்பின் சிபாரிசிக்கு அமைய ஜனாதிபதி நியமிக்க வேண்டும். ஆனால் இத்திருத்தத்தினூடாக அப்பதவியை ஜனாதிபதி நேரடியாக நியமிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அவ்வாறே 17வது திருத்தத்திலுள்ள பொலிஸ் ஆணைக்குழு நீக்கப்பட்டு அதற்கான அதிகாரங்கள் அனைத்தையும் பொலிஸ்மா அதிபருக்கும் தேர்தல் ஆணையாளரின் அதிகாரங்கள் மட்டுப்படுத்தப்பட்டும் அரசசேவை மற்றும் நீதிச் சேவை தொடர்பான அதிகாரங்கள் அமைச்சரவைக்கும் வழங்கப்பட்டுள்ளது.

17வது திருத்தச் சட்டத்தினூடாக ஜனாதிபதியின் அதிகாரங்களுக்கு மட்டுப்பாடுகள் காணப்பட்டது. ஆனால் இத்திருத்தத்தின் மூலம் வலுஒன்றாக்கம் இடம்பெற்று தடைகளும் சமன்பாடுகளும் இல்லாத ஒரு பதவியாக மாற்றமடையக்கூடிய நிலமை ஏற்பட்டுள்ளது. வளர்ச்சியடைந்த நாடுகளைப் பொறுத்தமட்டில் ஏதோவொரு வகையில் ஆட்சியாளனுக்கான அதிகாரக்கட்டுப்பாடு காணப்படும். உதாரணமாக அமெரிக்காவை எடுத்துக் கொண்டால் அங்கு தடைகளும் சமன்பாடும் பின்பற்றப்பட்டு சிறப்பான ஆட்சிக்கு வழிவகுத்துள்ளது. இதனால் மலேசியா, சிங்கப்பூர், தென் கொரியா போன்ற நாடுகளில் ஜனாதிபதியானவர் உச்ச அதிகாரங்கள் கொண்டவராகக் காணப்படுவது போல இலங்கையும் மாற்றமடைந்துள்ளது.

17வது திருத்தத்தின் ஊடாக ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்துவதற்காக அரசியல் அமைப்பு பேரவை மற்றும் சுதந்திர ஆணைக்குழுக்கள் போன்றன கொண்டுவரப்பட்டது. ஆனால் இவை 18வது திருத்தத்தின் மூலம் இல்லாமல் செய்யப்பட்டு புதிய அமைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளது. அதாவது 17வது திருத்தச் சட்டத்தில் காணப்பட்ட அரசியல் அமைப்புப் பேரவையை நீக்கி (பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒரு உறுப்பினர், பிரதமரினாலும் எதிர்கட்சித் தலைவரினாலும் சிபார்சு செய்யப்படுவதன் மூலம் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஐந்து உறுப்பினர்கள், பிரதமரும் எதிர்கட்சித் தலைவரும் எந்த அரசியல் கட்சியை அல்லது சுயேட்சைக் குழுவைப் பிரநிதித்துவப்படுத்துகின்றார்களோ அவைகளல்லாத ஏனைய கட்சிகளினதும் சுயேட்சைக் குழுக்களினதும் பெரும்பாண்மை சம்மதத்தின் மூலம் பெயர் குறிக்கப்பட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒரு உறுப்பினர். இவர்களுள் பிரதமர், சபாநாயகர், எதிர்கட்சித் தலைவர் ஆகியோர் அவர்களது பதவிவழி காரணமாக பேரவையின் உறுப்பினர்களாக இருப்பர். சாபாநாயகர் இப்பேரவையின் தலைவராக இருப்பார்.) அதற்கு பதிலாக பாராளுமன்ற ஆலோசனைச் சபை உருவாக்கப்படவுள்ளது. இதில் 5பேர் அங்கம் வகிப்பர். சபாநாயகர், பிரதமர், எதிர்கட்சித்தலைவர் உட்பட பிரதமரினாலும் எதிர்க்கட்சித் தலைவராலும் நியமிக்கப்படும் இருவர். சிறுபான்மை இனத்துக்கோ சிறுகட்சிகளுக்கோ எவ்வித அங்கத்துவமும் இல்லை.

## பாராளுமன்ற ஜனநாயம் வீழ்ச்சி, வலுவேறாக்கக் கோட்பாடு கேள்விக்குறி
## (The decline of Parlimentary democracy and the question of Separation of Power)

பொதுவாக நிறைவேற்று அதிகார முறைமை பின்பற்றுகின்ற நாடுகளில் முத்துறைகளில் ஒரு துறை மற்றொரு துறையில் செல்வாக்குச் செலுத்தக் கூடாது என்பதற்காக வலுவேறாக்கக் கோட்பாட்டுடன தடைகளும் சமன்பாடுகளும் பின்பற்றப்படுகின்றது. இதற்கு எடுத்துக்காட்டாக அமெரிக்காவினைக் குறிப்பிட முடியும். வலுவேறாக்க கோட்பாடு என்பது சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை ஓன்றோடு ஒன்று தலையீடோ கட்டுப்பாடோ இல்லாமல் சுகந்திரமாக இயங்குவதே ஆகும். எந்த ஒரு துறையானது தனக்கு இருக்கும் அதிகாரங்களை மீறி நடக்கும் போது ஏனைய துறைகள் தலையிட்டு அதனை சமநிலைக்கு கொண்டுவருவதே தடைகள் சமநிலைகள் எனப்படும். அது நிறைவேற்றுத்துறை ஜனாதிபதியை மையமாக வைத்தே கொண்டுவரப்பட்டது.

இலங்கையானது 1978ஆம் ஆண்டு முதல் இன்றுவரை நிறைவேற்று அதிகாரமுடைய ஆட்சி முறையினை பின்பற்றி வருவதோடு சட்டத்துறைக்கு பொறுப்பாக பாராளுமன்றமும் நிர்வாகத்துறைக்குப் பொறுப்பாக ஜனாதிபதியும் நீதித்துறைக்கு நீதிமன்றமும் என அதிகாரம் பிரிக்கப்பட்டு காணப்படுகின்றன. ஆனால் 18ஆவது திருத்தமானது வலுவேறாக்கக் கோட்பாட்டை கேள்விக்குட்படுத்தியுள்ளது. 17வது திருத்தத்தில் உயர் நியமனங்களை கட்டுப்படுத்த அரசியல்

அமைப்பு பேரவை நிர்வாக அதிகாரங்களை எதேச்சையாக பிரயோகிக்கக்கூடாது என்பதற்காக சுதந்திர ஆணைக்குழுக்கள் என்பன இருந்தன. 18ஆவது திருத்தம் அதனை இல்லாது செய்து, ஜனாதிபதியிடம் அதிகாரங்களை குவித்துள்ளது. வலுவேறாக்கம் இருப்பதாக சொல்லமுடியாது வலு ஒன்றாக்கம்தான் காணப்படுகிறது. அதிகாரங்கள் அனைத்தும் ஜனாதிபதியிடம் குவிக்கப்பட்டு இருக்கிறது. இத்திருத்தத்தினூடாக இலங்கையின் அரசியல், பொருளாதாரம், சமூக வளர்ச்சி, நல்லாட்சி, மனித உரிமை மற்றும் நேர்மையான தேர்தல் நடவடிக்கைகள் போன்றவற்றில் தாக்கம் செலுத்துவதாக இத்திருத்தம் அமைகின்றது.

## ஜனாதிபதியின் அதிகாரத்தினை மேலும் பலப்படுத்தியுள்ளது (Consolidation of the executive Presidential Power)

18வது திருத்தமானது 1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியமைப்பின் சரத்து 32(2) இல் குறிப்பிடப்படுள்ள ஜனாதிபதியானவர் இரண்டு தடவை மாத்திரமே பதவி வகிக்க முடியும் என்றது. ஆனால் 18ஆவது திருத்தத்தினூடாக ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவரும் மக்களால் இருமுறை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டவரும் அதன் பின்னர் எத்தனை தடவையேனும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படவும் முடியும் என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றில் ஆட்சி பீடமேறியவர்களில் அதிகமானோர் நிறைவேற்ற அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை இல்லாமல் செய்வோம் என்ற கோசத்துடனே ஆட்சி பீடமேறுகின்றனர். ஆனால் அது வெரும் வாய்ச்சொல்லாகவும் மக்களின் வாக்குகளைப் பெருகின்ற சாதனமாகவும் பயன்படுத்தினர். இதனடிப்படையில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவும் தற்போது ஆட்சி செய்கின்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போன்றோரினைக் குறிப்பட முடியும். நிறைவேற்று ஜனாதிபதித்துவ ஆட்சி முறையை அறிமுகப்படுத்திய ஜே.ஆர்.ஜெயவர்த்தன தனது இரண்டாவது பதவிக்காலம் முடிந்த பிறகு மூன்றாவது தடவை ஆட்சிபீடமேற முயற்சித்த போதிலும் கட்சியிடையே காணப்பட்ட மூத்த உறுப்பினர்களின் அழுத்தங்கள் காரணமாக ஓய்வு பெற்றார். பொதுவாக ஒரு நாட்டின் யாப்பானது காலமாற்றத்திற்கேற்ப அரசியல் நடத்தையைக் கொண்டு செல்வதற்கும் மக்களின் நலன்களைப் பேணுவதையும் மையமாகக் கொண்டு அமைய வேண்டும். ஆனால் இலங்கை அரசியல் யாப்பினைப் பொறுத்தமட்டில் ஆட்சிபீடத்தில் இருக்கின்ற அதிகாரிகளின் நலன்களை பேணுகின்றதாக அமைந்துள்ளது – அமைந்து வருகின்றது.

பொதுவாக ஜனாதிபதி ஆட்சி முறை பின்பற்றப்படுகின்ற நாடுகளின் முற்று முழுதான அதிகாரங்களும் ஜனாதிபதியிடமே இருக்கும். இதற்காகவே உலக நாடுகளின் ஜனாதிபதி ஆட்சிமுறை பின்பற்றப்படுகின்ற நாடுகளில் தலைவரின் பதவிக் காலம் வரையறுக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. முதன்முதலாக ஜனாதிபதி ஆட்சி முறையினை உலகில் அறிமுகப்படுத்திய அமெரிக்காவில் கூட இரண்டு தடவைக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாக இருக்க முடியாது. அமெரிக்காவில் ஆரம்பத்தில் ஜனாதிபதியின் பதவியானது எவ்வித வரையறையும் காணப்படவில்லை. அதன்பிறகு 1951ஆம் ஆண்டு அரசியமைப்பின் 22ஆவது திருத்தத்தில் ஜனாதிபதியானவர் இரண்டு தடவைக்கு மேல் பதவி வகிக்க முடியாது என்ற வரையறை கொண்டுவரப்பட்டது. அவ்வாறே பிரான்ஸ், இந்தியா, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளிலும் ஜனாதிபதியின் பதவிக் காலம் வரையறுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் பதவிக்காலம் வரையறுக்கப்படுகின்ற போது முத்துறையும் சமநிலை பேணப்படும். இலங்கையினைப் பொறுத்தமட்டில் 18ஆவது திருத்தத்தின் மூலம் ஜனாதிபதியின் கைகளில் அனைத்து அதிகாரங்களையும் ஒப்படைக்கப்பட்டுள்ளது என சுருக்கமாகக் கூற முடியும்.

மேலும் 18வது திருத்தினால் ஏற்பட்ட மற்றுமொரு சவாலாக டொனமூர் காலத்திலிருந்து தமிழ், முஸ்லிம் மற்றும் மலையக மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. முதன்முதலாக சிங்கள மக்களின் உரிமைகள் முதன்முதலாக 18வது திருத்தத்தின் மூலம் பறிக்கப்பட்டுள்ளது. அதாவது, இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலினை பொறுத்தமட்டில் சிறுபாண்மை இனத்தைச் சேர்ந்த

ஒருவர் ஜனாதிபதியாக வருவது சாத்தியமற்றவொன்றாகும். 18வது திருத்தத்தினூடாக ஒருவர் எத்தனை தடவையும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படலாம் எனக் கூறப்பட்டமையானது சிங்கள மக்களின் உரிமைகளைப் பாதித்துள்ளது எனச் சுட்டிக்காட்ட முடியும். மேலும் இத்திருத்தம் மேற்கொள்வது தொடர்பாக மக்கள் மத்தியில் எந்தவிதமான வாக்கெடுப்பும் நடாத்தப்படாமையானது பாரியதொரு குறைபாடாகும்.

## முடிவுரை (Conclusion)

18வது யாப்புச் சீர்திருத்தமானது அதிகாரத்தை மேலும் வலுப்படுத்துவதாகவும் மனித உரிமை ஆணைக்குழுவின் சுயாதீனத்தன்மைக்கு பாதிப்பினை ஏற்படுத்துவதாகவும் அமைவதோடு, இத்திருத்தமானது ஜனநாயகத்திற்கு எதிரானது என்றும் வலுவேறாக்கச் செயற்பாட்டை கேள்விக்குறியாக்குகிறது என்றும் 13வது திருத்தச்சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் மத்திய அரசு கைப்பற்றும் வாய்ப்பும் காணப்படுகின்றது. மேலும் பங்குபற்றுதல் ஜனநாயகம், பாராளுமன்ற ஜனநாயகம், நீதிப்புரணாய்வு அதிகாரம் போன்றன கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கு எதிர்மறையாகவும் அமைந்துள்ளது. இவ்வாறான பல சவால்களை தன்னகத்தே கொண்டதாக 18வது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

## உசாத்துணைகள் (References)

Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka (1978), Department of government, Sri Lanka. (2001).

Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka (1978), Eighteenth Amendment to the Constitution, (2010).

Transparency International Sri Lanka, (2010), 'Adverse Impact of the 18th Amendment on Governance'.

*'18 Constitutional Amendment: Issues and Challenges in Curriculum and Standards'*, (2010), Institute of Social and Policy Sciences (I-SAPS)

*ஊடக நோக்கு, 18ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பான அரச அச்சு ஊடக அறிக்கையிடல்,* (2011, January), CPA - மாற்றுக் கொள்கைக்கான நிலையம்.

Basil Fernando, 'The last debate on the Sri Lankan constitution',http://www.humanrights.asia/resources/journals-magazines/article2/0903/the-last-debate-on-the-sri-lankan-constitution, (Accessed on: 2012.10.28).

M.A.M. நிலாம், '*18வது திருத்தத்தை ஆதரிப்போர் பணம், பதவிக்கு விலை போனவர்கள்*', தினக்குரல் நாளேடு, 2010.09.08.

ரொஷான் நாகலிங்கம், '*18வது திருத்தம் தமிழ் மக்களுக்காக தீர்வை வெகுதூரம் பின்தள்ளி விடும்*', தினக்குரல் நாளேடு, 2010.09.08.

சபரி, '18வது திருத்த யோசனைகளின் பின்னால் மறைந்துள்ள அரசியல்', தினக்குரல் நாளேடு, 2010.09.12.

சிவநேசன்துறை சந்திரகாந்தன், '*மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரம் 18வது திருத்தச் சட்டம் ஊடாக இழக்கப் படுகின்றது*', தினக்குரல் நாளேடு, 2010.09.14.

சபரி, '*இலங்கையின் அரசியலமைப்புத் திருத்தம் ஜனநாயகத்தை பலவீனப்படுத்தி விட்டது*', தினக்குரல் நாளேடு, 2010.09.13.